இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 27.10.2026

தேர்தல் ஆணையம் முதலில் செய்ய வேண்டியது!

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் தொடர்பாக சென்னையில் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி நடத்திய கூட்டத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட ९ கட்சிகள் வெளிநடப்பு செய்துள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரப் பணிக்கு (SIR) எதிர்ப்புத் தெரிவித்தும், இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தியும் இவர்கள் வெளிநடப்பு செய்துள்ளார்கள்.

2027 ஜனவரி 1 ஆம் தேதியை தகுதியேற்பு நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தை (SSR) இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட 17 மாநிலங்களில் எஸ்.எஸ்.ஆர். பணிகள் நடைபெற இருக்கின்றன. இதன்படி நவம்பர் 12 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகும். அன்றுமுதல் டிசம்பர் 11 வரை வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்ப்பது, நீக்குவது தொடர்பாக விண்ணப்பங்கள் கொடுக்கலாம். இப்பணிகள் அனைத்தும் டிசம்பர் 28க்குள் முடியும். இறுதி வாக்காளர் பட்டியல் 2027 ஜனவரி 4 ஆம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டத்தைத் தான் தமிழ்நாடு தலைமை ஆணையர் நடத்தி இருக்கிறார்.

தி.மு.க. சார்பில் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பரந்தாமனும், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டினும், "ஏற்கனவே நடத்தப்பட்ட SIR குளறுபடிகளை எப்போது சரி செய்யப் போகிறீர்கள்? நீக்கப்பட்ட 74 லட்சம் பேரை எப்படி சேர்க்கப் போகிறீர்கள்? இப்போது அறிவிக்கப்பட்டுள்ள SSR நடவடிக்கைகளும் குழப்பம் இல்லாமல் எப்படி நடைபெறும்?" என்ற கேள்வியை எழுப்பி விட்டு வெளிநடப்பு செய்துள்ளார்கள்.

SIR நடவடிக்கைகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் வரைவு வாக்காளர் பட்டியலில் 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்கள் நீக்கப் பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இரட்டைப் பதிவு உள்ளவர்களாக 3 லட்சத்து 98 ஆயிரத்து 278 பேர் சொல்லப்பட்டார்கள். உயிரிழந்தவர்களாக 26 லட்சத்து 94 ஆயிரத்து 672 பேர் அறிவிக்கப்பட்டார்கள். 66 லட்சத்து 44 ஆயிரத்து 881 பேர் இடம் பெயர்ந்தவர்களாக சொல்லப் பட்டார்கள். பெரும்பாலான வாக்காளர்கள் தங்களது முகவரியில் வசிக்காததால் கண்டறிய முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

"முந்தைய முகவரியில் இல்லாத காரணத்தால் வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர். வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் தேடிச் சென்ற குறிப்பிட்ட முகவரியில் வாக்காளர்கள் இல்லாததே பெருவாரி யான வாக்காளர்கள் நீக்கப்பட்டக் காரணம். அந்த வாக்காளர்கள் வேறு பகுதிக்கு இடம் மாறி இருக்கலாம். அல்லது வேறு காரணத் தால் கணக்கீட்டுப் படிவத்தைக் கொடுக்காமல் இருந்திருக்கலாம்" என்று தேர்தல் ஆணையம் அப்போது அறிவித்தது.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக சென்னை மாவட்டத்தில் 14 லட்சத்து 25 ஆயிரத்து 18 பேர் நீக்கப்பட்டார்கள். கோவை மாவட்டத்தில் 6 லட்சத்து 50 ஆயிரத்து 590 பேர் நீக்கப்பட்டார்கள். செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் நீக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகம். இந்த நடவடிக்கைகளுக்கு பின்னால் பெரும் சதிகள் உள்ளன.

SIR நடவடிக்கை பல்வேறு மாநிலங்களில் தேர்தல் முடிவுகளை மாற்றி இருப்பது இப்போது அம்பலமாகி வருகிறது.

'பிசினஸ் லைன்' பத்திரிகை வெளியிட்டுள்ள கட்டுரையில், 'தமிழ்நாட்டில் செய்யப்பட்ட SIR நடவடிக்கைகள் தான் தமிழ்நாட்டின் தேர்தல் முடிவை மாற்றியது' என்று சொல்லப்பட்டது.

SIR மூலம் அதிகளவில் வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்ட தொகுதிகளில் தான் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி இருக்கிறது. குறைந்த அளவு வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் தி.மு.க.வும், அதிகளவில் வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் அதிகளவில் த.வெ.க.வும் வெற்றி பெற்றுள்ளது என்கிறது இப்பத்திரிக்கை.

80 ஆயிரம் வாக்குகள் நீக்கப்பட்ட 10 தொகுதிகளில் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளதாகவும், 50 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 22 தொகுதிகளில் 18 இல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளதாகவும் சொல்கிறது. 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 37 இடங்களில் 24 இல் த.வெ.க. வெற்றி பெற் றுள்ளது. 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 66 இடங்களில் 32 இல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது. அதாவது SIR நடவடிக்கைகள் தான் தேர்தல் முடிவுகளை மாற்றி இருக்கிறது என்று சொல்கிறது 'பிசினஸ் லைன்'.

இதன் பிறகும் SIR நடவடிக்கைகளை அப்பட்டமாக ஏற்க முடியாது. அந்தக் குழப்பங்களைத் தீர்க்காமல் அடுத்த குழப்பங்களைச் செய்ய விடவும் கூடாது.

"மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலை ரத்து செய்ய வேண்டும்" என்று உத்தவ் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே சொன்னதற்கு இதுவரை தேர்தல் ஆணையம் பதில் சொல்லவில்லை.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சர்ச்சைக்குரிய தாக மட்டுமல்ல, சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றன. நேர்மை யான அமைப்பு தான் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த தேர்தல் ஆணையம் தனது நடவடிக்கைகள் அனைத்தையும் மறுபரிசீலனை செய்தாக வேண்டும். ஞானேஷ்குமார் போன்றவர்களை வைத்துக் கொண்டு இதைச் செய்ய முடியாது.

சிங்கப்பூர் லீ குவான் யூ பொதுக் கொள்கைப் பள்ளியின் 'பெண்கள் மற்றும் தலைமைத்துவம்' பயிலரங்கில் பங்கேற்க

முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிங்கப்பூர் பயணம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, அக். 27 - தென்சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், சிங்கப்பூரில் உள்ள தேசியப் பல்கலைக்கழகத்தின் (National University of Singapore) அங்கமாகச் செயல்படும், பொதுக் கொள்கைக் கல்வியில் உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான லீ குவான் யூ பொதுக் கொள்கைப் பள்ளியில் (Lee Kuan Yew School of Public Policy) நடைபெறவுள்ள 'பெண்கள் மற்றும் தலைமைத்துவம்' (Women and Leadership) பயிலரங்கில் பங்கேற்கச் சிங்கப்பூர் சென்றார்.

இதனையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சிங்கப்பூர் குடியரசின் சென்னையிலுள்ள துணைத் தூதரகம் (Consulate General of the Republic of Singapore), இப்பயிலரங்கில் பங்கேற்க டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. பொதுக் கொள்கை, ஆளுகை மற்றும் தலைமைத்துவத் துறைகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்தப் பயிலரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெண் தலைவர்களின் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதோடு, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் தலைவர்கள் தங்களது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்துகொள்வதற்கான சர்வதேசத் தளமாகவும் இப்பயிலரங்கு அமைகிறது. ஆளுகை சார்ந்த பொதுவான சவால்கள், பெண்களின் தலைமைத்துவ வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான கூட்டு முயற்சிகள் குறித்து இதில் கலந்துரையாடப்பட உள்ளது.

இப்பயிலரங்கில் பங்கேற்கச் சிங்கப்பூர் செல்வதற்கு முன்னதாக, சென்னையில் உள்ள சிங்கப்பூர் குடியரசின் துணைத் தூதர் வில்லியம் சிக் (Mr William Chik) அவர்களை முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் சந்தித்தார்.

இப்பயிலரங்கில் பங்கேற்கத் தமக்கு அழைப்பு விடுத்தமைக்காகவும், ஆதரவளித்தமைக்காகவும் துணைத் தூதரகத்திற்கு அவர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் தலைவர்களுடன் கலந்துரையாடும் இந்த வாய்ப்பில் பங்கேற்பதில் தமக்குள்ள ஆர்வத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.

இப்பயிலரங்கின் முக்கியத்துவம் குறித்து முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் கூறுகையில்,

"வெவ்வேறு நாடுகளையும், பல்வேறு பின்னணிகளையும் சேர்ந்த பெண் தலைவர்கள் ஒரே தளத்தில் சந்திப்பது, எல்லைகளைக் கடந்த சிந்தனைகளையும் கருத்துப் பரிமாற்றங்களையும் முன்னெடுப்பதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில் துறையைச் சேர்ந்த தலைவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஒன்றிணையும்போது, பெண்கள் எதிர்கொள்ளும் பொதுவான சவால்களுக்குத் தீர்வு காணவும், கல்வி, திறன் மேம்பாடு, பொருளாதாரப் பங்கேற்பு ஆகிய துறைகளில் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளவும், பாலினச் சமத்துவத்தை முன்னெடுப்பதற்கான கூட்டு முயற்சிகளை உருவாக்கவும் முடியும்.

தமிழ்நாட்டு மேனாள் முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமூகநீதிக்கு தமிழ்நாடு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. தமிழ் நாட்டின் அனுபவங்களை இந்தச் சர்வதேசத் தளத்தில் பகிர்ந்துகொள்வதோடு, தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பெண் தலைவர்களின் அனுபவங்களிலிருந்தும் கற்றுக்கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்றார்.

தென் சென்னை மக்களவைத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பெண்களின் தலைமைத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய ஆளுகை மற்றும் சமூக மேம்பாடு குறித்த தமிழ் நாட்டின் அனுபவங்களையும் பார்வைகளையும் சர்வதேச அரங்கில் பகிர்ந்துகொள்வதற்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் நன்றியுடன் வரவேற்றுள்ளார்.

இந்தப் பங்கேற்பு இந்தியா - சிங்கப்பூர் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்தவும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் தலைவர்களிடையே நீடித்த தொடர்புகளை உருவாக்கவும் உதவும். மேலும், கல்வி, திறன் மேம்பாடு, பொருளாதார வாய்ப்புகள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் ஆகியவை அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குவதில் வகிக்கும் பங்கு குறித்த ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றங்களுக்கும் இப்பயிலரங்கு வழிவகுக்கும்.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு : பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து

தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

அக். 31 அன்று நடைபெறுகிறது!

சென்னை, அக். 27 - சட்டம் ஒழுங்கு சீர்கேடு - பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து, தி.மு.க. மகளிர் அணி சார்பில் அக். 31 அன்று மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன.

இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் வருகிற 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு தி.மு.க. தலைமைக் கழகம் தெரிவித்துள்ளது.

இந்தியா முழுவதும் கடந்த 2 ஆண்டுகளில் நடந்த

அனைத்துத் தேர்தல்களையும் ரத்து செய்ய வேண்டும்!

மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தல்!

புதுடெல்லி, அக். 27 - இந்தியா முழுவதும் கடந்த, 2 ஆண்டுகளில் நடந்த அனைத்து தேர்தல்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

பீகார் மாநிலம் பாட்னாவில் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்துகொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், எஸ்.ஐ.ஆர்., எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில் முறைகேடுகள் நடப்பதாகவும், எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்கள் பெயர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழ்நாடு, மேற்கு வங்கம், பீஹார், ஹரியானா, மஹாராஷ்டிரா மாநிலங்களில் ஓட்டுத் திருட்டு நடத்தப்பட்டு ஆட்சிகள் கைப்பற்றப்பட்டன என்றும், முறைகேடாக நடைபெறும் அரசுகள் அகற்றப்பட வேண்டும் என்றும் கார்கே வலியுறுத்தினார்.

நாடு முழுதும் நடத்தப்படும் எஸ்.ஐ.ஆர்., பணிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், கடந்த இரண்டு ஆண்டுகளில் நடத்தப்பட்ட அனைத்து சட்டசபை தேர்தல்களையும் ரத்து செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இனி வரும் காலங்களில், வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும், பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் தேர்தல்களில் ஓட்டுச் சீட்டு முறையையே பின்பற்ற வேண்டும் என்று மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தினார்.



குன்னூர் பர்லியாறு சாலையில் ஏற்பட்டுள்ள மண் சரிவுகள் மற்றும் பாதிப்புகளை குன்னூர் சட்டமன்ற உறுப்பினரும், நீலகிரி மாவட்ட பொறுப்பாளருமான கே.எம்.ராஜு நேரில் சென்று பார்வையிட்டு, பொதுமக்கள் வழக்கம்போல் இந்த சாலையை பயன்படுத்திட தேவையான நடவடிக்கைகளை போர்க் கால அடிப்படையில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். உடன் மாவட்ட அவை தலைவர் போஜன், குன்னூர் ஒன்றியச் செயலாளர் பிரேம்குமார் மற்றும் பலர் உள்ளனர்.